*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **13 ஜூன், 2022**

# பத்திரிகை செய்தி

புதுச்சேரி, சுகாதாரத்துறையின் புதுப்பிக்கப்பட்ட நகர சுகாதார மற்றும் வாழ்வில் நல மையக் கட்டிடத்தின் திறப்பு விழா சுகாதாரத் துறை இயக்குனர் அலுவலகத்தில் இன்று(13.06.2022) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் நல மையத்தை குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு. ந. ரங்கசாமி, பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. க. லட்சுமி நாராயணன், சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் ஸ்ரீராமலு, சுகாதாரத்துறை அதிகாரிகள் உடனிருந்தனர். மேலும், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான ஓ.ஆர்.எஸ். பாக்கெட்டுகளை துணைநிலை ஆளுநரும் முதலமைச்சரும் இணைந்து வழங்கினர். செய்தியாளர்களிடம் பேசிய துணைநிலை ஆளுநர்,

- இந்த ஓ.ஆர்.எஸ் என்பது குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு வந்தால் தரக்கூடியது. இதைத்தான் தர வேண்டும் என்பதில்லை. கொஞ்சம் இளநீருடன் உப்பு சேர்த்துக் கொடுக்கலாம். நீர்மமான பழரசம் தரலாம். நீருடன் உப்பு சர்க்கரை கரைசல் தரலாம்.
- ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு வாந்தியும் வயிற்றுப்போக்கும் வரும்போது தண்ணீர் கொடுக்கக் கூடாது, தண்ணீர் கொடுத்தால் அதிகம் பேதியாகும் என்று தாய்மார்கள் தவறுதலாக புரிந்து கொண்டிருக்கிறார்கள். அது தவறு.
- எந்த அளவிற்கு நீர்ச்சத்து கொடுக்கிறோமோ அந்த அளவிற்கு நல்லது என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் அவசியமான சூழ்நிலையில் அவர்கள் சிரமப்படக் கூடாது என்பதற்காகவும் இது தரப்படுகிறது. ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் உள்ள அனைத்து வீடுகளுக்கு வீடுவீடாக இது வழங்கப்படும்.